

# நினைவுறல்

திருமதி சகுந்தலை சுந்தரம் அவர்கள்

பிறப்பு: 1917-05-08 இறப்பு: 1997-05-22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி சகுந்தலை சுந்தரம்

பிறப்பு : 1917 – 05 – 08

இறப்பு : 1997 – 05 – 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புக் கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுந்தலை சுந்தரம்

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 1917.05.08 |
| இறப்பு | : | 1997.05.22 |
| பிறந்த இடம் | : | தெல்லுளுவை, வல்வெட்டி |
| தாயார் பெயர் | : | முத்தாச்சி |
| தந்தையார் பெயர் | : | இராமுப்பிள்ளை |
| சகோதரர்கள் | : | கந்தசாமி<br>இலட்சுமிப்பிள்ளை<br>குஞ்சுப்பிள்ளை<br>குமாரசாமி |
| திருமணம் (1931) | : | சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் சுந்தரத்தை மணமுடிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| பிள்ளைகள் | : | மகன் | - சு. வடிவேலு | - அமரர் |
| | | மகன் | - சு. டிவகலாலா | |
| | | மகன் | - சு. யோகரத்தினம் | - அமரர் |
| | | மகள் | - சு. இராஜேஸ்வரி | |
| | | மகன் | - சு. இந்திரன் | |

| | | | |
|---|---|---|---|
| மருமக்கள் | : | டி. சிவமலர் | |
| | | செ. செல்லமாணிக்கம் | - அமரர் |
| | | இ. சாந்தி | |

| | | |
|---|---|---|
| பேரப்பிள்ளைகள் | : | அம்பிகை<br>பிறேமினி<br>நிஷங்கன்<br>காயத்திரி<br><br>அகிலன்<br>அற்புதன்<br>அருணன்<br>துஷ்யந்தன்<br>வாஷினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22.05.97

எங்கள் வாழ்க்கைப் பாதையில்
ஒரு மைல் கல்-
என் தாயை இழந்த நாள்.
என்னை இவ்வுலகிற்கு
அறிமுகமாக்கியவளைப்பற்றி
அடிக்கடி, நான் யோசிப்பதுண்டு.
மழைக்குக் கூட,
மறந்தும் கல்லூரி
வளவிற்குள்,
போனதில்லை என்று,
அடிக்கடி கூறுவதில்,
அவவிற்கு,
ஆனந்தம்,
திருப்தி,
அப்பப்பா.
ஆனால் என் மூத்த மகள்
அ.........ஆ..............
சொல்லுங்கோ,
அப்பம்மா,
என்று விளையாடிய போது,
அந்தத் திருப்தி,
நெளிந்ததைப் பார்த்திருக்கிறேன்.

வல்வெட்டி எங்கள் கிராமம்-முன்னர்
பெரிய பட்டணமாக இருந்திருந்தது.
கிராமமே எங்கள் இரத்த
உருத்துக்கள்தான்.
படிப்பில்,
அறிவில்,
ஆரம்ப நிலையிலிருந்து,
மின்னியல் கிராமம்,
என்று சொல்லுமளவு,
வளர்ந்ததைக் கண்டுள்ளேன்.
அறிவில்லாத இடத்தில்,
கோபம் பெருகியிருக்கும்.
ஒருவரை ஒருவர்,
புரிந்து கொள்ளும்,
ஆற்றல் மரணித்துவிடும்.
அதனால்
கிராமத்திற்குள் சண்டை .
கிராமங்களிடையே சண்டை.
உறவினருக்குள்ச் சண்டை.

ஒரு சட்டியில் உண்டோர்
வீட்டுச் சட்டி பானைகள்
உடைப்பர்.
கன்னை கட்டி நின்று
மல்லுக் கட்டுவர்.
நித்திய நிகழ்வுகளாகி
நின்ற காலம் -ஒன்று.

கிராமத்தவர் படைத்தவன்
கடவுள்
அவனை மறக்கக்
கூடாதென வாழ்வோர்.
வல்வெட்டியிலிருந்து,
காவடி,
கரகம்,
பால்ச்செம்பு,
கற்பூரச்சட்டி,
சன்னதியானுக்குப்
போகும்-அங்கு
அன்னதானம்
எங்கள் கிராம வருட
நிகழ்வுகளில்
இதுவுமொன்று- இது இரண்டு

கிராமத்திற் பல ஆலயங்கள்,
ஆனாலும், தொண்டமனாற்றில்
வீடமைத்த, சன்னதியானுக்கு
தனியிடம் - அவனின்
கொடியேற்றத்திலிருந்து
பூங்காவனம் வரை கிராமம்
வலு ' கிளீன் '
மாலை வேளைகளில்,
சிலர் வீட்டுத்திண்ணைகளில்,
கம்பராமாயணம்,
மகாபாரதம்,
படிப்பு,
தெரிந்த ராகத்தில்
"வாசிக்கத் தெரிந்தோர்"
பாடி வாசிப்பர்
சிறு வட்டமே கூடியிருக்கும்,
சிறுவர் முதல் கிழவர் வரை
அதில் மூழ்கியிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே
பிளேன் ரீ
இது மூன்று.

சிவராத்திரிக் காலமென்றால்,
ஊஞ்சல் ஆட்டம்.
வசதி படைத்தோர்,
வீட்டில்,
பெருமூஞ்சல்.
இரவானதும்,
பெண்கள்,
ஆண்கள்,
போட்டி போட்டு,
உன்னி ஆடுவர்.
இனிய குரலில் பாட்டு.
சுண்டல், வடை, கச்சான், தேனீர்
வழங்கப்படும்.
வாரக்கணக்கில் கிராமமே மகிழ்ந்து,
நிற்கும் - இது நான்கு

மரணவீடு என்றால்,
எட்டுக்கட்டைச்,
சுருதியில்,
ஒப்பாரி.
நெஞ்சில்,
கையால் பொம் விழும்.
தலையில் அடி,
மரணவீட்டில்,
31 நாட்களும்,
காலை,
மதியம்,
மாலை,
அழுகை,
கிராமமே அங்கு
நிற்கும் - இது ஐந்து.

பனங்காணிகளுக்குள்,
விளையாட்டுப்,
போட்டிகள்.
சிவப்பு,
மஞ்சள்,
பச்சை,
என கிராமம்,
கூறு போட்டு
நின்று - போட்டி.
தன்மகன்,

முன்னுக்கு வருகிறான்,
என்பதில் ஒரு,
பெருமிதச் சிரிப்பு.
இது ஆறு.

அக்கால,
வீடுகள்,
ஓலைக் கூரைகள்,
கொண்டவை.
ஒரு வீட்டு,
மேய்தல் என்றால்,
அயல் கூடிவிடும்.
பொதுவாக சனிக்கிழமையில்.
கூரையில் மூவர்,
வலக்கை,
இடக்கை
தரம்பிரிக்க இருவர்,
ஓலை கொடுக்க இருவர்,
ஈர்க்கில், நனையப்போட
கொடுக்க, எனப் பலர்.
காலைச் சாப்பாடு-
இடையிடையே,
சில வேளை கள்ளு-
பின்னர் குளிப்பு-
மதிய உணவு-
ஆண்களும் பெண்களும்,
திரண்டு நிற்பர்.
இதுவோ கூட்டுறவின்,
குறியீடு - இது ஏழு.

கிராமத்தில்,
எல்லா வீட்டிலும்
கிணறுகள் இல்லை.
ஒரு சில
பொதுக் கிணறுகள்-
எங்கள் அயல்
தெல்லுவை-
ஒரு கிணறு-
விடியப்பறம் 4 மணியில்
இருந்து - அதற்கு வேலை.
சேவைகள் - பல வகை.
மாலையில்-
அக்கால இளம் பெண்கள்
மனைவிமார்-
தினம் கூடுவர்-
இது எட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண வீடுகள்-
ஒழுங்கு பண்ணும் முறை
பலவிதம்-
காதல்-
பேசிச் செய்தல்-
ஒன்று சேர்ந்து
பின்னர் முடித்தல்-
பெண்கள் சிலர்
மாலைகளில் கதைப்பர்-
வலு-
சீரியஸாக இருக்கும் -
அன்றிரவு
நிச்சயம்
இரண்டு
இளசுகள்-
சோறு கொடுத்து
புருஷனும்
பெம்புளையுமாவர்.
ஆரம்பத்தில்
பதிவுகளுமில்லை.
இது ஒன்பது.

சித்திரைப் பொங்கல்
சிறப்பாக இருந்த
காலம்-
பல விளையாட்டுக்கள்-
புதிய உடைகள்
மருத்து நீர்க் குளிப்பு
போர்த் தேங்காய்-
செவெண்டிப் புளியின்
கீழ்- ஒரே சனம்-
சில சமயம்
சண்டையிலும் முடியும்-
இளம் வாலிபர்கள்
தமது பலத்தைக்
காட்டச்
சந்தர்ப்பம்
பார்த்து நிற்பர்-
இது ஒரு வருடாந்த
நிகழ்வு-
இது பத்து.

இப்படி எத்தனையோ
கூறலாம்-
இந்த நிகழ்வுகளிலெல்லாம்-
சகுந்தலைக்கு
ஒரு தனியிடம்-
அது தான்
என் தாய்க்கு-
இந்தத் தலைமைத்துவம்
எப்படி வந்தது?
" சகுந்தலை-
அ விற்கு
அடுத்த எழுத்தென்ன"
" உனக்கொரு பகிடி
என்ன"-
என்று கூறிய
என் தாய்-
எப்படி முன்னுக்கு
நின்றாள்
அவளின்
ஆளுமை என்ன?
அங்குதான்
அப்படியென்றால் -
நான்
அநுராதபுரம்,
பொலநறுவை,
திருமலை,
மன்னார்-
வேலை செய்த
இடங்கள்-
மனுஷி தனிய
பஸ்ஸிலோ,
றெயினிலோ,
வந்துவிடும்-
தமிழை விட
வேறு பாஷை
...............!
ஆனால் தொடர்பாடல்-
சுப்பேர்-
சீமாட்டிக்கு
மூக்குநுனியில்
கோபம்-
சுந்தரத்தாரும்,
சௌந்தரத்தாரும்,
அடிக்கடி
ஊடலோ
என்னவோ-
என் படிப்புப் பாழ்-
யாழ்ப்பாணம்
வல்வெட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டி
யாழ்ப்பாணம்-
மாறி மாறி
அம்மா எனக்குத்
தந்த
இடமாற்றங்கள்
யாழ் இந்துவில்
1952ல் சேர்க்கப்பட்ட பின்
No Transfer
பல்கலைக்கழகம்
போகும் வரை-
திங்கள்-போய்
வெள்ளி திரும்பல்.
சனி
ஞாயிறு
-அம்மாவின் உபசரிப்பு-
அப்பர் எங்களை அடித்தால்
முடிந்தார் எனலாம்
சுத்தி சுத்தி வந்து
மனுசி பேசும்
சுந்தரத்தார் அவுட்
என் குடும்பத்தின்
எல்லாத்திலும்
முன்னுக்கு
நின்ற
என்னைப் பார்த்து
அந்த ஏழை
மனம்
குபேரனாகும்
67ல் நான் பி.ஏ
பட்டதாரி
வேலையில்லை
என்னவளும்
என்னுடன்
சேர்ந்துவிட்டாள்
எல்லோருக்கும்
கவலை
அம்மாவைப்பற்றிச்
சொல்லத் தேவையில்லை
70ல் சீ.ஏ.எஸ்
தந்தி அடித்தேன்
கொழும்பிலிருந்து
கிராமம் முழுவதும்
வெடி கொழுத்த
காசு கொடுத்தாள்
என் அன்னை

சீ.ஏ.எஸ். உத்தியோகம்
என் அன்னைக்கு
புரியாததொன்று
டிவகலாலா
சரியாகச் சொல்ல வராது
"மகன் பெரிய உத்தியோகமாம்
சகுந்தலை"
இனி உன்னைப் பிடிக்க
முடியாது என
காண்பவர்
சுற்றம்
இனத்தவர் சொல்லச் சொல்ல
மனுஷிக்குப் படுகுசி
நீ என்று
வாயார அழைத்த
அந்த மனதில் என்ன தோன்றியதோ
நீங்கள் என்று கூறத் தொடங்கியது
நான் பேச
சீ.....நீ. பெரிய உத்தியோகம்
மற்றவர் முன்
மரியாதையாகத்தான்
கதைக்க வேண்டும்.
அப்பாவி
அதுதான் தாயோ

யாழ்ப்பாணத்தில்
நான் ஏ.சி.எல்.சி
அங்கு செய்த
தொழிலும் அதுதான்
அரச ஊழியம்
ஏழைக்குதவும்
கருவி என்ற
தத்துவம் எனது
எல்லா விடயங்களுக்கும்
சனம் வரும்
மாதத்தில் குறைந்தது
ஒரு முறையாவது
வல்வெட்டியில்
எங்கள் சிறு வீட்டில் நான் நிற்பேன்
பலர் தேடி வருவர்
அம்மா பாடு
ஒரே புளுகமும், பிசியும்
மகனைத் தேடி
தாயிடம் பலர்
இலேசான சிபாரிசும் நடக்கும்
அக்காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவை மதியாது நடந்த
யாராவது உதவிக்கு
வந்தால்
ஒரு பார்வை
சரி ....... சரி
அவன் வரட்டும்
சொல்லுகிறன்
நிரம்பி வழியும்
இதயம் அதுதானோ?

யாழ் இந்து
குமாரசுவாமி மண்டபத்தில்
சனசமூக நிலைய
அங்கத்தவர்களுக்கான
எனது கலந்துரையாடலும்
பேச்சும்
மண்டபம் நிறைந்த சனம்
பேசத் தொடங்கினேன்
சபை நடுவில்
திருமதி. சுந்தரம்
வைத்த கண் எடுக்காமல்
நான் திகைத்து விட்டேன்
இந்த மனுஷிக்கும்
சனசமூக நிலையத்திற்கும்
உள்ள தொடர்பு என்ன?
வந்தவர்களுடன்
சேர்ந்து இவவும்
கூட்டம் முடிந்தது
பலர் என் மேசையைச்
சுற்றி
கதைத்து முடிந்து
வெளியே வந்தால்
மனுஷி போட்டுது
அது தான் சகுந்தலையோ?

சின்ன வயதில்
நல்லாகப் பேசுவன்
2ம் வகுப்பில்
தொடங்கியது
இப்பவும் தொடர்கதைதான்
ஆரம்பத்தில்
என் விமர்சகர்
அவ தான்.......
"உதார் பெடியன்"
அது சகுந்தலையின்ரை

வந்தவர் சொல்லுவார்
எனக்கும்
தலை கால் தெரியாமல்
இருக்கும்
இன்று
இராமு
முத்தாச்சி
தம்பதியின் கடைசி மகள்
இல்லை
நாகலிங்கம் சுந்தரத்தின்
அன்பு மனைவியில்லை
வடிவேலு
டிவகலாலா
யோகரெத்தினம்
இராஜேஸ்வரி
இந்திரன்
பாசத்தாயில்லை
சிவமலர்
செல்வமாணிக்கம்
சாந்தியின்
மாமி இல்லை
அம்பிகை
பிறேமினி
நிசங்கன்
காயத்திரி
துஷ்யந்தன்
வாஷ்ஷினி
அகிலன்
அற்புதன்
அருணன்
பேத்தியில்லை.

ஆனால்
அவவின் வாழ்வு
பூரணமானது
இன்பமும்
துன்பமும்
கொண்ட வாழ்வு
பிறந்தோர்
போகத்தான் வேண்டும்
அது இயற்கை
மாற்ற முடியாது
மாற்றக்கூடாது
ஆகவே
ஒன்றும் செய்ய முடியாத
கையறு நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்
பூவும்
பிஞ்சும்
காயும்
ஏன் மரமே
சாயும்
இந்தக் காலத்தில்
பூரண வாழ்வு
கண்ட
அன்னையின்
இழப்பு
துன்பமல்ல
இன்பமே
ஆனால் 85 வருடங்கள்
வல்வெட்டியின்
உயிர் ஓட்ட
நிகழ்வுகளிலெல்லாம்

ஓடியும்
நடந்தும்
வண்டியிலும்
பஸ்சிலும்
காரிலும்
திரிந்து
வாழ்ந்த
ஒரு பேதைப்
பெண்ணின்
மறைவை
நினைக்கும் போது
இதயத்தில்
எங்கோ
கசிவு தான்.

சுந்தரம் டிவகலாலா
மகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணயர்ந்து தூங்கினளோ

காலனின் கரஞ்சேர்ந்து, கண்மூடி உறங்கி விட்ட,
தாயவளின் தனயனே, சற்று உம்மை வருத்திவிட்டேன்!
தாலாட்டுப்பாடி உம்மை தலைவாரி வளர்த்த தெய்வம்
தவிக்கத்தான் வைத்துவிட்டே தனியாகச் சென்றனளோ!

சொல்லி நான் துயர்தீர்க்க, தூரத்தில் இருந்து விட்டேன்,
வல்லவனின் எழுத்தை மாற்ற மனிதரால் முடிந்திடுமோ!
கல்விக்கே சாரதியாய் கலாலாவைத் தந்த அன்னை,
கல்லறையில் சென்றங்கே கண்ணயர்ந்து தூங்கினளோ!

எல்லாம் முடிந்ததென்று ஏசுபிரான் சொல்லிவிட்டு,
எல்லோர் முன்னிலையில் எமலோகம் ஏகினாரே!
கல்வாரி மலையிலந்த கடைசி மூச்சை விட்டது போல்,
கல்சூழ்ந்த திருமலையில் கண்ணயர்ந்தாள் தங்களன்னை!

ஆண்டவன் அழைத்து விட்டால் அடுத்தகணம் சுணங்கலாமோ,
தாண்டவமாடிய சிவன் தப்பாமல் கணக்கிடுவான்!
மண்குழியில் விண்பார்க்க மரித்ததாயை வளர்த்திவிட்டீர்,
மண்போட்டேன் மூன்றுபிடி மானசீகமாகவேதான்!

உருவழியும் மெழுகுவர்த்தி உருவாக்கும் ஒளியதனை,
உருவழிந்தே உங்களைத்தான் உருவாக்கி விட்டாளன்னை!
உருண்டோடும் வாழ்க்கையதில் உதிர்ந்த தளிர் உங்களன்னை
உதிர்ந்த தளிர் துளித்திடவே நீர்த்துளிகள் உங்கள் பணி!

தந்தை மொழி என்பதில்லை, தந்தைநாடு என்பதுண்டோ,
தாய் என்ற சொல்சேர்ந்தே தனித்துவமாகி நிற்கும்!
தாயவளின் மதிப்பிற்கு விதப்புரைகள் இவ்விரண்டே,
தூயவனே காவலனே கடைக்கண்ணீர் தவிர்த்திடுவீர்!

நான் இன்று நன்றி சொன்னேன் நல்லவள் அத்தாயவர்க்கு
பொன்னான மகனைத் தந்து புகழுடம்பு ஆகிவிட்டாள்!
வன்மை மிகு இம்மண்ணை வளமாக்க நினைத்துத்தானோ,
தொன்மைமிகு தமிழ்நாட்டின் செயலாளர் ஆக்கிவிட்டாள்!

சுந்தரத் தமிழ்த்தாயின் சுந்தரரே கேளுமையா,
இந்திரன் தான் நேர்வரினும் இறந்ததாய் உயிர்ப்பதுண்டோ!
மந்திரமோதிய மறை மாமுனிவர் சேருமந்த,
வைகுந்தம் சேர்ந்திருப்பாள், மாதாவும் நீர் அறிவீர்!

தந்திடக் கவிதையிதை தாமதந்தான் ஆகியதே,
தந்தி கொண்டு கூறிடத்தான் சந்தர்ப்பம் அமையவில்லை!
தந்தி மீட்ட இராவணேசன் புகழ் கொண்ட திருமலையில்,
சுந்தரரே உம் உறவார் துயர்நீங்க என் கவிதை!

- கலைக்கோட்டன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNET

## இன்ரெநெட் (INTERNET) என்றால் என்ன ?

பல்லாயிரக் கணக்கான கணினிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் - இன்ரெநெட் ஆகும். கணினிகளின் இணைப்பால் உருவானதால் இணையம் என்று இதனை தமிழில் குறிப்பிடுகிறார்கள். நீங்கள் இதனை வாசித்துக் கொண்டிருக்கும் போதே நிமிடத்துக்கு ஒரு கணினிவீதம் இணையத்துடன் இணைந்து கொண்டிருக்கின்றது என்று சொல்லுமளவிற்கு வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு ஸ்தாபனம் இணையம் ஆகும்.

இங்கு நான் ஸ்தாபனம் என்று இணையத்தைக் குறிப்பிட்டாலும் இன்ரெநெட் தமக்குத்தான் சொந்தம் என உரிமை கோர ஒருவருமில்லை ; ஒரு சொந்தக் கட்டிடம் இல்லை ஒரு உருவம் இல்லை. நடாத்தி செல்ல தலைவர்களோ வழிகாட்டிகளோ இல்லை. இப்படித்தான் இயங்கவேண்டுமென்ற ஒரு செயற் திட்டங்களோ, வரைமுறைகளோ எதுவுமில்லை.

எந்த ஒரு உலக ஸ்தாபனமோ அல்லது உலக நாடோ இதனைத் தமக்கு உரியதென்று உரிமை கோரிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவில்லை. இந்த இணையத்திலிருக்கும் கணினிகள் 60 சத வீதத்திற்கு அதிகமானவை அமெரிக்காவில் இருந்தாலும் அமெரிக்காவுக்கும் அமெரிக்க அரசுக்கும் எதிரான கருத்துகளுக்குக்கூட இந்த இணையத்தில் இடமுண்டு. தனக்கெதிராக இணையம் செயற்படுகின்றதென்று அமெரிக்கா தடை போடவும் முடியாது.

சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டு உருவமும் அருவமுமாய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து கொண்டு தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தில் (INFORMATION TECHNOLOGY) பெரும் பங்காற்றி வருகின்றது இணையம்.

இந்த இணையத்தில் வீட்டுக் கணினியிலிருந்து அரச-தனியார் அலுவலகங்கள்,ஸ்தாபனங்கள்,பல்கலைக்கழகங்கள் என்பனவற்றில் கணினிகளின் வரையுள்ள இணைப்பே இந்த இணையத்தின் உயிர் நாடி.

பெரிய பல்கலைக்கழகங்கள் தமது நூற்றுக்கணக்கான கணினிகளை ஒன்றோடொன்று இணைத்து பணிபுரியும். இந்த இணைப்பை LOCAL AREA NETWORK அல்லது LAN அதாவது " உள்ளக தகவல் வலைப் பின்னல் " என்று கூறலாம். இப்படி பெரிய பெரிய ஸ்தாபனங்கள்,கல்லூரிகள் உள்ளக தகவல் வலைப் பின்னல்களால் தம்மிடையே பல இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. இந்த இணைப்புக்களை WIDE AREA NETWORK (WAN) " விசால தகவல் வலைப் பின்னல் " என்று அழைப்பர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள WAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்புக்கள் தமக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுதான் இந்த இணையத்தை உருவாக்கின.

இப்படி இணைப்புக்களை கணினிகளிடையே ஏற்படுத்திக் கொள்ளுவதால் என்ன பயன் என்று நீங்கள் எண்ணலாம்.

இன்று உலகில் மிகவும் பெறுமதி வாய்ந்த விடையம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா ? அது தங்கமோ, இரத்தினமோ, மாணிக்கமோ அல்ல. இவை எல்லாவற்றிக்கும் ஒரு பெறுமதியுண்டு. ஆனால் தகவல் (INFORMATION) என்று சொல்லப்படுகின்ற விடயம் தான் உலகில் பெறுமதி மிக்க , அதேவேளையில் பெறுமதி மதிக்கப்படாத விடயம்.

எதைப்பற்றியும் நானாவித தகவல்களை தெரிந்து வைத்திருப்பது ஒரு மனிதனின் பலம். அதுபோலவே ஒரு அரசாங்கத்திற்கு, ஒரு வர்த்தக ஸ்தாபனத்திற்கு, ஒரு கல்வி நிலையத்திற்கு தகவல் தான் உயிர். அவற்றின் வளர்ச்சி, இலாபம், நிர்வாகம், தலைமைத்துவம் எல்லாம் அவற்றிக்கு கிடைக்கும் தகவல்களிலேயே தங்கியுள்ளன.

தகவல்கள் கிடைத்தால் மாத்திரம் போதாது. அந்த தகவல்களை தமது தேவைக்கு வேண்டிய தகவல்களாக இருக்க வேண்டும். எமக்குத் தேவைப்படுகின்ற வேளையில் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். கிடைத்த தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட, உண்மையான தகவல்களாக இருக்க வேண்டும்.

இத்தனை பண்புகள் உள்ள தகவல்கள் ஒரு தனி மனிதனின் அல்லது அரசாங்கத்தின ,அல்லது ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் , பலமாக விளங்குவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

கணினிகளை இவ்வுலகில் உருவாக்க முன்னரே யாவரும் தகவல்களை உபயோகப்படுத்திக் கொண்டுதான் இருந்தார்கள்.

ஆனால் அவற்றிலிருந்து பெறும் பயன் என்பது பல காரணங்களால் குறைந்த அளவில் தான் கிட்டியது.

நிறையத் தகவல்கள் கிடைத்தாலும் அவற்றைச் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடிய இடவசதி,நிறையத் தேவைப்பட்டது. இந்த தகவல்களை கட்டுக்கட்டாக காகிதங்களில் சேமிக்க வேண்டியிருந்தது. சேமிக்கப்பட்ட தகவல்களை இயற்கை அனர்த்தங்கள், இராமபாண பூ ச்சிகள் என்பவற்றிருந்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இருந்தது.

இதைவிட, சேமித்து வைத்த தகவல்களிருந்து நமக்குத் தேவையான தகவல்களை,தேவையான நேரத்தில் தேடி எடுப்பது என்பது இலகுவான காரியமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய பிரச்சனைகள் யாவும் கணினிகள் வரவால் தீர்த்துவைக்கப்பட்டன. கணினிகள் குறைந்த இடத்தில் அதிக தகவல்களை சேமித்தன. சேமித்த தகவல்களை ஒழுங்காக (நிரலிட்டன). தகவல்களின் தன்மைக்கு,தரத்துக்கேற்ப அவற்றை பட்டியலிட்டுவைத்தன. உபயோகிப்பவரின் கண்ணுக்கு மாத்திரமே தெரியக் கூடியதாக ஒளித்து வைக்கும் ரகசியம் பேணும் பண்பு கணினிகளுக்கு இருந்தன.

சேமித்து வைத்த தகவல்களிருந்து நமக்கு தேவையான தகவல்களை மாத்திரம் தேடித் தரும் திறமை கணினிகளிடம் இருந்தது. இப்படித் தேடித் தருவதையும் நொடிப் பொழுதில் புரிந்தன. எனவே தகவல்களை பொறுத்தமட்டில் இப்படிப்பட்ட விடயங்களுக்கு கணினிபோல் ஒரு இயந்திரம் இதுவரை கண்டுபிடிக்கப்படவேயில்லை என்று சொல்லலாம்.

கணினிகள் இருந்த இடத்தில் தகவல்களும் இருந்தன. தகவல்கள் தேவைப்பட்ட போது அதைத் தேடி-கணினி இருந்த இடத்திற்கு வந்து பெறவேண்டிய நிலை இருந்தது. அல்லது கணினி இருந்த இடத்தில் உள்ள ஒருவர், அத்தகவல்களைப் பெற்று தபாலிலோ அல்லது FAX என்ற தொலை தொடர்பு ஆவண அனுப்பி மூலமாகவோ தேவைப்பட்ட இடத்திற்கு அனுப்ப வேண்டி இருந்தது.

இதனால் தகவல்களை பெறுவதில் காலதாமதம் ஆகியது. தகவல்களை அனுப்பும் போது அவற்றில் இரகசியங்களை பாதுகாக்க கவனம் எடுக்க வேண்டியிருந்தது. அனுப்பும் வழியில் தகவல்களின் உள்ளடக்கங்கள் மாறக்கூடிய,தொலைந்து விடக்கூடிய அசௌகரியங்களும் இருந்தன.

கணினிகள் ஒரு பக்கத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் போது மறுபக்கத்தில் தொலைத்தொடர்பு துறை என்கின்ற TELECOMMUNICATION துறையும் அபிவிருத்தியடைந்து கொண்டிருந்தது. தொலைபேசி , FAX , என்பவை இந்த துறையில் அடக்கம். கணினியின் வளர்ச்சிக்கு உதவிய மின்னனுவியல் (ELECTRONICS)நுட்பங்களே-தொலைத் தொடர்பு துறையிலும் உபயோகமாகின. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் கணினியும் தொலைதொடர்பும் வளர்ந்து கொண்டிருந்த காலத்திலே- இந்த இரு துறைகளையும் இணைத்து செயல் ஆற்ற அறிவியல் உலகம் ஆராய்ச்சியில் ஈடுபட்டது.

இந்த இரு துறைகளின் இணைப்பில் தகவல் பரிமாற்றமும் சேர்ந்த போது உருவானது தான்,இன்று உலகில் எங்கும் பேசப்படுகின்ற INFORMATION TECHNOLOGY - என்கின்ற தகவல் தொழில் நுட்பம். இதனை சுருக்கமாக IT என்றும் அழைப்பார்கள். இந்த புதிய தொழில் நுட்பத்தின் விளைவாக உருவாகியது தான் INTERNET என்கின்ற இணையம்.

தகவல்களை எழுத்து வடிவத்திலோ,சித்திர வடிவிலோ, நகரும் சித்திர வடிவங்களாகவோ வீடியோ காட்சியாகவோ, ஒளி ஒலி கலவைகளாகவோ உலகின் எந்த மூலைக்கும் சில நிமிடங்களில் இன்று அனுப்பக் கூடியதாக இருக்கின்றதென்றால் அதற்கு காரணம் இந்த தகவல் தொழில் நுட்பமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சரித்திரத்தில் சில பகுதிகளை நாம் புரட்டிப் பார்க்கும் போது சில விசித்திரமான விடயங்கள் தெரியவரும். வெவ்வேறு கால கட்டங்களில் அழிவுக்கென்று உருவாக்கப்பட்ட விடயங்கள் இன்று உலக மக்களின் நல்வாழ்வுக்கு உதவிக் கொண்டிருப்பதை கண்ணால் கண்டு கொண்டிருக்கின்றோம்.

ஹீரோசிமாவை சாம்பர் மேடாக்கி- பல்லாயிரக்கணக்கான உயிர்களின் அழிவுக்கு காரணமாயிருந்த அணுவைப்பிளக்கும் தொழில் நுட்பம் இன்று புற்று நோய் சிகிச்சைக்கு உதவிக்கொண்டிருக்கின்றது.

கண்டம் விட்டு கண்டம் தாவி நாட்டை அழிக்கும் ஏவுகணை ஆய்வுகளிலிருந்துதான் மனிதன் அம்புலியில் இறங்கினான். வானில் வலம் வந்து கொண்டு செய்திபரிமாற்றம்,வானிலை முன் அறிவிப்பு,கடல்,நிலவளங்களின் ஆய்வு என்பவற்றிக்கு உதவிக்கொண்டிருக்கின்ற செய்மதிகள் கூட இந்த அழிவு ஆராய்ச்சின் பெறுபேறுகள் என்றால் வியப்பாகத்தான் இருக்கும்.

அழிவுக்கு உருவான டைனமைட் உதவியிருக்காவிடில்- மலைகளைக் குடைந்து ரயில்கள் ஓடியிருக்காது. விவசாயம் செய்ய அணைகள் உருவாயிருக்கமாட்டா.

இந்த நூற்றாண்டில் இணையற்ற கண்டு பிடிப்பு என்று சிலாகித்து பேசப்படும் கணினி கூட ஆரம்பத்தில் அழிவுக்கு உதவ உருவானதுதான்.

எறிகணைகளின் வீச்சு தூரத்தை,கோணங்களை,வேகத்தை கணக்கிட்டு எதிரிகளின் நிலைகளை அழிக்க தேவைப்பட்டு உருவாகிய ஒரு கணக்கு இயந்திரத்தின் வளர்ச்சிதான் இன்றைய கணினி.

இப்படியாகத்தான் கணினிகளையும் தொலைதொடர்புகளையும் இணைத்து தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்த எண்ணியதும் ஒரு இராணுவ நோக்குடன் தான்.

1969ம் ஆண்டு காலகட்டத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் பெரும் வல்லரசுகளாக விளங்கின. தங்களில் யார் பெரியவன், என்ற ரீதியில் ஆயுத உற்பத்தியில் போட்டி போட்டுக் கொண்டு கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் (MISSILES) ஏவுகணைத்தயாரிப்பில் ஈடுபட்டன. யாராவது முதலில் தாக்கி விடுவார்களோ என்ற பயம்- இருபாலாருக்கும் இருந்தது. அப்படி ஒரு திடீர் தாக்குதல் ஏற்பட்டால் அமெரிக்காவில் பரந்து கிடக்கின்ற இராணுவ கேந்திர நிலையங்களிடையே தகவல் பரிமாற்றம் தடைப்பட்டு அமெரிக்காவே அழிந்துவிடலாம். எனவே இந்த கேந்திர நிலையங்களில் உள்ள கணினிகளில் உள்ள தகவல்கள் எந்த ஒரு கேந்திர நிலையம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டாலும் மற்ற கேந்திர நிலையங்களில் உள்ள கணினிகளில் பெற்று இயக்ககூடிய வகையில் ஒரு NETWORK - கணினிகளை வலைப்பின்னல் முறையில் இணைத்து இயக்க ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இராணுவ கேந்திர நிலையங்களில் இருந்த 200 கணினிகள் இவ்வாறு தொடுக்கப்பட்டு இந்த வலைப்பின்னல் ADVANCED RESEARCH PROJECTS AGENCY-ARPA NET என்று அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு யுத்தத்தை எதிர்பார்த்து உருவாக்கப்பட்ட அமைப்பு பின்னர் நடைபெற்ற அரசியல் மாற்றங்களால் யுத்த பீதி நீங்கி விஞ்ஞான ஆய்வுகளுக்கு உபயோகிக்கப்பட்டது.

இந்த இணைப்பில் மெல்ல மெல்ல தனிப்பட்ட விஞ்ஞான ஆய்வுக்கழகங்கள் ,பல்கலைக்கழகங்கள் பெரும் நூலகங்கள் என்பன தங்கள் கணினிகளை இணைத்துக் கொண்டன. இப்படியான இணைப்பில் பல பலன்கள் கிட்டின. பல்கலைக்கழகங்கள் தமது ஆய்வுகளை பகிர்ந்து கொண்டன. கல்வி,ஆய்வு என்பவற்றில் ஏற்பட்ட சந்தேகங்களை பல்லாயிரம் மைல்கள் பயணம் செய்து தீர்க்காமல் - கணினி உதவியோடு கணப்பொழுதில் தீர்த்துக் கொண்டன. உலகின் மற்றைய நாடுகளுக்கும் இந்த கணினி இணைந்து பயன் பெறும் உத்திகள் பரவின. இந்த கால கட்டத்தில் செய்மதிகள் உலகை வலம்வர தொடங்கின. சில செய்மதிகள் - செய்தி தொடர்பு துறையில் பலன் தந்தன.

எனவே,ஒவ்வொரு நாட்டிலும் இருந்த கணினி வலைப்பின்னல்கள் தொலைத் தொடர்பு செய்மதிகளினூடாக - மாபெரும் கணினி வலைப்பின்னல் உருவாக வழிவகுத்தன. இவ்வாறே இன்றைய இணையம் உருவாகியது.

ஆரம்பத்தில் இணையத் தொடர்புக்கூடாக எழுத்துருவ கோப்புக்களையே (TEXT FILES) பரிமாற முடிந்தது. ஆனால் இணையத்தில் பங்கு பெறும் ஒவ்வொருவரும் - எந்தெந்த வழிகளில் இணையத்தை மேம்படுத்தலாம் என்று ஓயாத ஆய்வுகளை நடாத்தினர். அதன்பலனாக இன்று எழுத்துருவங்கள் மாத்திரமல்ல ஒலி - ஒளி சேர்க்கையான வீடியோ,ஒலிவடிவங்கள், திரைப்படங்கள் எதையுமே இணையத்தில் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும்.

இணையத்தை இப்படித்தான் உபயோகிக்க வேண்டும் என்பதற்கு எதுவித சட்டதிட்டமோ,வசதிகளோ இல்லை. இன்னொருவரின் சுதந்திரத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில் இணையத்தை உபயோகிக்கவும் என்று எழுதாத விதியை இணையத்தை உபயோகிப்பவர்கள் கடை பிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். அப்படியிருந்தும் வெறுக்கத்தக்க, விரும்பத்தகாத விடயங்களைக் கூட இணையக் கோப்புக்களில் காணலாம். இப்படியான விடயங்கள் வெகு குறைவேயானாலும். அதைத் தேடி கண்டு பிடித்து ரசிப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இணையத்தை உபயோகிப்பவர்களை இணையத்தில் பிடித்த விடயங்கள் எவை என்று கேட்டால் அவர்கள் முக்கியமான இரு விடயங்களை கூறுவார்கள்.

ஒன்று WORLD WIDE WEB அல்லது சுருக்கமாக W.W.W என்று அழைக்கப்படுகிற உலகளாவிய தகவல் மையம். மற்றது e-mail என்று அழைக்கப்படுகின்ற இலத்திரனியல் தபால் (ELECTRONIC MAIL)WORLD WIDE WEB சுருக்கமாக WEB என்று கூட அழைக்கப்படுகின்றது. இது ஒரு அறிவுக்களஞ்சியம். இந்த அறிவுக்களஞ்சியத்தில் சமையலா,அறிவியலா, அரசியலா ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமா , மருத்துவமா எந்த ஒரு துறையையும் சார்ந்த பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்கள் தேக்கி வைக்கப்பட்டுள்ளன. சிப்பிகளை பொழுது போக்காக சேகரிப்பவர், டைனோசர் பற்றி கட்டுரை எழுதும் மாணவன் அடுத்த நாட்டு அரசியலை விமர்சிக்க உள்ள அரசியல்வாதி போன்றோர் தமது ஈடுபாடுகளை கண்டறிய இணையத்திற்கு இணையான தகவல் மையம் வேறெதுவும் இல்லை எனலாம். இந்த தகவல்கள் தரபட்டிருக்கிற முறையும் விசித்திரமானது. ஒவ்வொரு விடயமும் ஒவ்வொரு ஆவணமாக (Pages) சேமிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆவணத்திற்கும் மற்றைய ஆவணங்களோடு தொடர்பு உண்டு. ஆவணத்தில் உள்ள விடயங்கள் வெறும் எழுத்துக் கோவைகளாக மட்டும் இருப்பதில்லை. ஆவணங்களில் உள்ள விடயங்களுக்கு தேவைப்படும் படங்கள் , ஒலி வடிவங்கள் , வீடியோத் துண்டுகள், திரைப்படத் துண்டுகள் யாவும் அந்த ஆவணத்தில் பொதிந்து எடுக்கப்பட்ட விடயம் பூ ரணமாக தரப்பட்டிருக்கும். உதாரணமாக உருத்திர வீணை பற்றிய ஆவணத்தை இணையத்தில் நாம் பார்ப்போமானால் உருத்திர வீணை எப்படி உருவாகியது , அதன் குணாதிசயங்கள் பற்றி நிறைய விடயங்கள் கட்டுரை வடிவத்தில் இருக்கும். அதேவேளை உருத்திர வீணையை இசைக்கும்போது எழும் ஒலி , பதிவு செய்யப்பட்டு கட்டுரையின் ஒரு பக்கத்தில் " வீணை ஒலி கேட்க இங்கே அமுக்குங்கள் " என்ற கட்டளை கொடுக்கப்பட்டிருக்கும். அந்த இடத்தில் அம்புக்குறியை கொண்டு சென்று தேர்ந்தெடுத்தோமானால் உங்கள் கணினி ஒலிபெருக்கி இணைத்த ஒன்றினுள் வீணை இசையைக் கேட்கலாம். அதுபோல் வீணை உருவாகும் முறையை ஓரிரு நிமிட வீடியோ துண்டாகத் சேர்த்தும் இருப்பார்கள். கட்டுரையைப் படிக்கும்போதே வீணை உருவாகுவதையும் உங்கள் கணினித் திரையில் காணலாம். உருத்திர வீணை பற்றி ஒளி ஒலி சேர்க்கையிலான பூ ரண அறிவை இணையத்தில் இப்படியாக நீங்கள் பெற முடியும்.

இன்னொரு முக்கியமான விடயமும் இந்த தகவல் வலய ஆவணங்களில் உண்டு. இதற்குப் பெயர் HYPERTEXT. ஆவணத்தில் சில வார்த்தைகள் தடிப்பாக (BOLD) எழுதப்பட்டிருக்கும். அல்லது வார்த்தைகளுக்கு அடிக்கோடு இடப்பட்டிருக்கும். (UNDERLINING) இந்தத் வார்த்தை பற்றி இந்தத் தகவல் மையத்தில் பிறிதொரு இடத்தில் விளக்கமாக விளக்கப்பட்டுள்ளது. என்பதையே இந்த HYPERTEXT என்று கூறப்படுகிற மிகைப்படுத்தப்பட்ட வார்த்தை குறிக்கிறது.

உதாரணத்திற்கு முன்னர் நாம் எடுத்துக் கொண்ட உருத்திர வீணை என்ற ஆவணத்தையே பார்ப்போம். இந்த ஆவணத்தில் இந்த வீணை இந்தியாவில் பிரபலமானது என்றொரு வசனம் வந்தால் இந்தியா என்ற சொல் HYPERTEXT தொடர்புடையதாக ஆக்கப்பட்டிருக்கும். நீங்கள் இந்த இந்தியா என்ற வார்த்தையை தேர்ந்தீர்களானால் இந்தியா பற்றிய சகல விடயங்களும் உள்ள ஆவணம் உங்கள் திரையில் வரும். இப்படியாக ஒரு விடயத்தில் ஆரம்பித்து பல விடயங்களுக்கு உங்களை இட்டுச் செல்லும் பண்பு கொண்டது இந்த தகவல் மையம். தினந்தோறும் புதிய புதிய விடயங்களைக் கொண்ட ஆவணங்கள் இந்த WEB என்கின்ற தகவல் மையத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமல்ல உலகின் பிரபல பத்திரிகைகள் கூட இணையத்திற்கென்று தமது முக்கிய செய்திகளை தயார் செய்து பிரசுரிக்கின்றன. இந்தப் பத்திரிகைகளை இணையத்தில் நாம் வாசிக்கலாம். இலங்கையில் கூட சில ஆங்கிலப் பத்திரிகைகள் இணையப் பதிப்பாக பிரசுரமாகின்றன. காலையில் நீங்கள் இந்தப் பத்திரிகைகளை வாசிக்க முன்னரே அதிகாலையில் இணையத்தில் இந்தப் பத்தரிகைகளை வாசித்துவிடலாம். தமிழ் நாட்டில் குமுதம் தமிழ் சஞ்சிகை கூட இணையத்தில் பிரசுரமாகிறது.

சில விளம்பர ஸ்தாபனங்கள் தமது விற்பனைப் பொருட்களை இந்த தகவல் வலயத்தில் விளம்பரப்படுத்துகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள வர்த்தகநிலையங்கள் வியாபாரப் பொருட்களை கண்கவர் படங்களோடு பட்டியலிட்டு விளம்பரப்படுத்துகின்றன. இவற்றை நீங்கள் தேர்ந்தெடுத்து உங்கள் கிறெடிட் கார்ட் இலக்கத்தை அறிவித்தால் நீங்கள் தேர்ந்தெடுத்த பொருள் உங்கள் வீடு தேடி வந்து விநியோகிக்கப்படும். சுருக்கமாகச் சொன்னால் உங்கள் விருப்புக்களுக்கேற்றவாறு உங்கள் தேவைக்கேற்றவாறு இந்த WEB தளத்தை நீங்கள் உபயோகப்படுத்தலாம். WEB தான் இணையம் இணையந்தான் WEB என்று சொல்லுமளவிற்கு இணையத்தில் மற்றும் பல விடயங்களிருந்தாலும் WEB தனியிடம் வகிக்கின்றது.

இணைய உபயோகிப்பார்களிடையே அடுத்து பிரபலமாக விளங்குவது இலத்திரனியல் தபால் அல்லது Electronic mail. இதனை சுருக்கமாக e.mail என்றும் அழைப்பர். இதனை சுருக்கமாக இப்படி விளக்கலாம். கணினியை உபயோகித்து இணையத்தின் ஊடாக உங்கள் நண்பருக்கு கடிதம் அல்லது செய்தி அனுப்புவதே.

சாதாரணத் தபாலுக்கும் இந்த கணினித் தபாலுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. இந்த கணினி தபால் மிகவும் விரைவாக அனுப்பும் இடத்தை போய் சேர்ந்து விடுகிறது. நீங்கள் கணினியில் கடிதத்தை அடித்து 'அனுப்பு' என்கிற பொத்தானை கணினி திரையில் அமுக்கியதும் ஒரு சில நிமிட நேரத்தில் உலகில் அடுத்த மூலையில் உள்ள நண்பரின் கணினியை சென்றடைந்து விடும். ஒரு காலத்தில் எழுத்துருவக் கடிதங்களை மாத்திரமே இப்படி e.mailல் அனுப்பமுடியும்.

இன்று புகைப்படம்,படம்,வீடியோத் துண்டுகள் என்று எதையுமே இந்த எலக்றோனிக் தபாலில் அனுப்பிவிடலாம். இந்த e.mailன் வேகத்தோடு தமது சாதாரண தபாலின் வேகத்தை ஒப்பிட்டு சாதாரண தபாலை snail mail - நத்தை வேக தபால் என்று கேலி செய்வதும் உண்டு.

வெளிநாட்டுக்கு சாதாரண தபாலை அனுப்ப ஏற்படும் செலவை விட மிகக் குறைந்த செலவே e.mail அனுப்பும்போது ஏற்படுகிறது. இணையத் தொடர்பு தரும்போது e.mail தொடர்பையும் இலவசமாக தருகின்றார்கள்.

உங்கள் கணினியை இணையத்தோடு இணைக்கும் ஸ்தாபனங்கள் இணையச் சேவை வழங்குநர் (Internet service provider) என்று சொல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் e.mail தொடர்பு கேட்கும்போது இந்த இணைய வழக்குநரின் கணினிகளில் உங்கள் எலக்றோனிக் தபால் விலாசம் பதியப்பட்டிருக்கும். இந்த விலாசத்தை உங்கள் நண்பர்கள் உறவினர்கள் - என்பவர்களுக்கு மாத்திரம் கொடுத்து வைத்தால் அவர்கள் எந்தநாட்டில் இருந்தாலும் கணினி மூலம் உங்களுக்கு கடிதம் எழுதி உங்கள் e.mail விலாசத்திற்கு அனுப்பிவிடலாம். அவர்களின் கடிதம் உங்கள் இணையச் சேவை வழங்குநரின் கணினிகளில் உள்ள உங்கள் விலாசத்தில் சேமிக்கப்பட்டுவிடும். எப்படி நாம் நாள்தோறும் எமது தபால் பெட்டியைத் திறந்து - கடிதங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கிறோமோ - அப்படியே இந்த e.mail அங்கத்தவர்களும் காலையில் முதல் வேலையாக கணினியை இயக்கி தங்கள் e.mail விலாசத்திற்கு ஏதாவது கடிதம் இருக்கின்றனவா என்று பார்ப்பார்கள். அப்படி கடிதம் இருந்தால் கணினி திரையில் அதனை வாசிக்க முடியும். தேவையானால் பதிப்பரில் (PRINTER) கொடுத்து பிரதி ஒன்றும் எடுத்துக் கொள்ளலாம். உண்மையில் உங்கள் அந்நியோன்னிய நண்பர், உறவினர்களுக்கு மட்டுமே உங்கள் e.mail விலாசத்தை தெரிவிப்பது நல்லது.

உங்கள் விலாசத்தை ரகசியமாக வைக்காமல் பகிரங்கப்படுத்தினீர்களானால் எங்கே என்று காத்துக் கொண்டிருக்கும் வர்த்தக நிலையங்கள் வியாபார நோக்குடையவர்கள் தங்கள் வியாபாரம் வர்த்தகம் பற்றிய தேவையில்லாத விளம்பரக் கடிதங்களால் உங்கள் e.mail தபால் பெட்டியை நிறைத்துவிடுவார்கள். உங்கள் e.mail விலாசத்துக்கு வரும் கடிதங்களை நீங்கள் வாசித்த பின்னர் அழித்துவிடலாம். அல்லாவிடினும் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு பின்னர் சாதாரணமாக ஒரு வாரத்தில் உங்கள் இணையச் சேவை வழங்குநர் அவற்றை நீக்கிவிடுவார்.

தற்போது இந்த e.mail வர்த்தக வியாபாரிகளுக்கு பெரும் உதவியாக இருக்கின்றது. இன்று இவர்கள் தங்கள் தொலைபேசி, Fax விலாசங்களுடன் உங்கள் e.mail விலாசத்தையும் சேர்த்து விளம்பரப்படுத்துகிறார்கள். இவர்களோடு வர்த்தகம், வியாபாரம் செய்ய விரும்புவோர் இவர்களில் உங்கள் e.mail விலாசத்தோடு தொடர்பு கொண்டு இவர்களின் பொருட்கள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

இணையத்தில் பிரபலமாகியுள்ள இன்னொரு இடம் NEWSGROUP என்கின்ற கலந்துரையாடல் மன்றம் எனலாம். இணைய அங்கத்தவர்கள் தத்தம் பொழுது போக்குகள், நம்பிக்கைகள்,கண்டுபிடிப்புக்கள் என்பவற்றை மற்றவரோடு பகிர்ந்து - கலந்துரையாட NEWSGROUP உதவுகின்றது. இவைகளில் சில வற்றில் நீங்களும் பங்களிக்க எண்ணம் கொண்டால் - அந்த குழுவில் பணம் கட்டி அங்கத்தவராக முடியும். இல்லாவிடில் சாதாரணமாக - இந்த ஒவ்வொரு குழுவினரது அபிப்பிராயங்களை - கருத்துக்களை நீங்கள் இலவசமாக வாசித்து அறிந்து கொள்ளமுடியும். கருத்தடை, கரு அழிப்பு, கம்யூ னிஸம்,ஆபாச இலக்கியம் போன்ற பிரச்சனைக்குரிய விடயங்கள் எல்லாம் காரசாரமான வாதப்பிரதிவாதங்களாக இந்த கணினி பட்டிமன்றத்தில் நடைபெறும். இந்த மன்றத்தில் ஒரு வித்தியாசமான பிரிவு ஒன்றும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAQ - Frequently Asked Questions, எந்த ஒரு விடயத்தையும்பற்றி அடிக்கடி எழும் சந்தேகங்களைப் இந்த இடத்தில் எழுதி வைத்தால் இந்த சந்தேகங்களைப் பலரும் தங்களுக்கு எட்டிய அறிவின் அடிப்படையில் தீர்த்துவைப்பார்கள். உதாரணமாக உங்களுக்கு அடிக்கடி கனவில் ஒரு வெண்புறா வந்து போகின்றது. இதன் அர்த்தம் என்ன? என்று ஒரு கேள்வியை FAQ தளத்திற்கு அனுப்பி விட்டால்- மனோவியல் நிபுணர்களிலிருந்து மாந்திரீக சாமியார்கள் வரை உங்கள் கனவுக்குப் பலன் அதில் கூறியிருப்பார்கள. இணையத்தில் அடிக்கடி அங்கத்தவர்கள் சென்று பார்த்து வரும் இடம் இந்த FAQ ஆகும்.

இந்த இணையத்தைப்பற்றி எத்தனை நல்ல அபிப்பிராயங்கள் இருக்கின்றனவோ அதுபோல் நிறையத் தப்பான அபிப்பிராயங்களும் உலா வருகின்றன.

இணையம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருப்பது. இணையம் CIA ஏஜண்ட்டுகளின் ஒரு தகவல் நிலையம் என்பதும் ஒன்று.

இணையத்தில் பங்கு பெறும் கணினிகளில் 70 சதவீதமானவை அமெரிக்கா , வடஅமெரிக்கா பகுதிகளில் இருக்கின்றன. என்றாலும் அமெரிக்கா நினைத்தால்கூட இணையத்தைக் கட்டுப்படுத்த முடியாது. நீங்கள் விரும்பினால் இணையத்துாடாக நேரடியாக அமெரிக்க ஜனாதிபதியின் e-mail விலாசத்திற்கு கன்னாபின்னா என்று திட்டிக் கடிதம் எழுதலாம். அதற்குக்கூட சிலவேளை உங்களுக்கு நன்றி சொல்லி கடிதம் வரலாம்.

ஆபாசம் சம்பந்தப்பட்ட விடயங்களும் நாஜிகளின் பிரச்சாரமும்தான் இணையத்தில் மலிந்து கிடக்கின்றன என்று இன்னொரு தப்பபிப்பிராயம் நிலவுகின்றது. நூற்றுக்கு ஒரு சதவீதம் ஆபாசமான விடயங்கள் இணையத்தில் கிடைக்கின்றன என்பது உண்மைதான். எவரெவர் எதைத்தேடி போகிறார்களோ அவை எல்லாம் அங்கே கிடைக்கும் . ஆபாசம் தேடுபவர்களுக்கு ஆபாசத்தையும்- ஆன்மீகம் தேடுபவர்களுக்கு ஆன்மீகத்தையும் இணையம் தரும். நீங்கள் தேடிப்போனால் ஒழிய-இந்த ஆபாச விடயங்கள் தாமாகவே வந்து உங்கள் கணினிகளைச் சேராது . ஏறக்குறைய 40 மில்லியன் அங்கத்தவர்களைக் கொண்டுள்ள இந்த இணையத்தில் இப்படி சில விடயங்களும் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது. இதனாற்றான் உண்மையான எழுத்துச்சுதந்திரம் பேச்சுச்சுதந்திரம்-கட்டுபாடற்றசுதந்திரம் இணையத்தில் உலாவி வருகின்றது என்பது நிதர்சனமாக தெரிகிறது.

இணையத்தின் அடிப்படை அமைப்பை புரிந்த உங்களுக்கு- இணையத்தின் உண்மை சொரூபமும் சுதந்திரப்பண்பும் புரிந்திருக்கும்.

இணையத்தில் எல்லாமே இலவசம் என்று ஒரு தப்பான கருத்தும் உண்டு. அநேகமான விடயங்கள் இணையத்தில் இலவசமாக கிடைப்பது உண்மை. ஆனால் சில விடயங்களுக்கு அவற்றை நீங்கள் உபயோகிக்க, படிக்க ஒரு சிறுதொகை பதிவுப் பணமாக செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களும்-வக்கிரபுத்திக்காரர்களும்தான் இணையத்தில் அங்கத்தவர்களாக இருகின்றார்கள். ஆளுமைப் பிறழ்வு கொண்ட (PERSONALITY DISORDER) நட்டு கழன்ற கேசுகளும் இணையத்தில் ஈடுபாடு உடையவர்கள் என்று தப்பான கருத்துக்களை சிலர் பரப்பி வருகிறார்கள்.

இன்று உலகின் இளைய சமுதாயம்தான் இணையத்தின் சக்தியாக விளங்குகின்றது . புதிய விடயங்களைக் காணவேண்டும்,படிக்கவேண்டும், அறியவேண்டும் என்ற தீராத வேட்கை கொண்ட இந்த இளைய சமுதாயத்தின் பசிக்கு பல்சுவை விருந்தளிக்கும் இடமாக இணையம் விளங்கும்போது பலாக்கனியில் மொய்த்த ஈக்கள் போல் இணையத்தில் மூழ்கிக்கிடப்பவர்களில் இளைஞர் சமுதாயமே அதிகமாக இருப்பதில் ஆச்சரியப்படத் தேவையில்லை. அதுமாத்திரமல்ல இன்று இணையத்தின் பயனைப் பெறுபவர்களைப் பட்டியலிட்டுப் பார்த்தால் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள்,விஞ்ஞானிகள், மருத்துவ மேதைகள் ஏன் இல்லத்தரசிகள் கூட என்று பட்டியல் நீளும்.

இணையத் தொடர்பு பெறுவதெப்படி ?

இணையத்தோடு இணைந்துள்ள கணினிகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

இருபத்திநாலு மணிநேரமும் இயங்கிக் கொண்டு இணைய அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்து கொள்ள கோப்புக்களையும்,ஆவணங்களையும், பிறவிடயங்களையும், e-mail விலாசங்களையும் தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் கணினிகள் இவைகளை இணையம் என்ற பெரிய சக்கரத்தின் பல்லுகள் என்று விபரிக்கலாம். இவற்றின் இணைப்புகள்தான் தகவல் பெரும் வழி ( INFORMATION SUPER HIGHWAY) என்ற மாய உலகிற்கு வித்திட்டது. இந்த மாய உலகின் மறு பெயர் இணையம். இவற்றில் பல்கலைக்கழகங்களில் உள்ள கணினிகள் அரச-தனியார் நிறுவனங்களில் உள்ள கணினிகள் சில தனிநபர்களின் சொந்தக்கணினிகள் எல்லாம் உள்ளடக்கம். இவையாவும் இணையம் என்ற அமைப்பில் நேரடியாகத் தொடர்பு கொண்டவை. இவற்றை HOST SERVERS அல்லது HOST COMPUTERS என்று அழைப்பார்கள்.

அடுத்த வகைக் கணினிகள் - நுகர்வோர் (**consumers**) வகையைச் சேர்ந்தவை. இணையத்தில் இருந்து தகவல்களைப் பெறுவதற்கு உபயோகமாகின்றன. உங்கள் கணினிகள் இந்த தரத்தை சேர்ந்தவை. ஆனால் உங்கள் கணினியால் நேரடியாக இணையத்தோடு தொடர்பு கொள்ள முடியாது.

INTERNET SERVICE PROVIDERS அதாவது இணையச் சேவை வழங்குநர் என்ற நிறுவனங்கள் நாட்டுக்கு நாடு நகரத்துக்கு நகரம் நிறுவப்பட்டுள்ளன. இருபத்து நான்கு மணிநேரமும் இணையத்தோடு தொடர்பு கொண்டு இருப்பது இவர்களது கணினிகள். இவர்களோடு நாம் தொடர்பு கொண்டால் எமக்கு ஒரு இணையக் கணக்கை தமது கணினியில் ஆரம்பிப்பார்கள் . இந்த இணையக் கணக்கு – INTERNET ACCOUNT- என்பது என்னவென்றால் எமது கணினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இவர்களது கணினியோடு தொடர்பு கொள்ளத் ஒரு பிரத்தியேக எண், மற்றும் இணையத்தோடு தொடர்பு கொள்ள தேவையான செயல் முறையம் (SOFT WARE),கருவியம் (HARD WARE) என்பவற்றை இலவசமாகத் தருவதோடு இணையத்தோடு பணிபுரிய இலவச செயல்முறை விளக்கங்களும் தருவார்கள்.

இன்று இலங்கையின் தலைநகர் கொழும்பில் - இணைய வழங்குநர் சேவை - ஏறக்குறைய ஆறுக்கும் மேற்பட்ட நிறுவனங்களால் நடாத்தப்படுகிறது.

இணையத்தோடு தொடர்பு கொள்ள அடுத்தது எமக்கு ஒரு கணினி தேவை. எந்த வகைக் கணினியாக இருந்தாலும் சரி - ஆனால் WINDOWS என்ற OPERTAING SYSTEM ஐ நிறுவக்கூடிய 386, 486, 586, பென்ரியம் ரக IBM இணை ஒத்த (COMPATIBLE) கணினிகள் பொருத்தமானவை.

அடுத்து தேவை ஒரு தொலைபேசி இணைப்பு. தற்போது நமது நாட்டில் பாவனையிலுள்ள தொலைபேசி தொடர்புகளின் வேகம் - இணையத்தொடர்புக்கு - வேகம் குறைந்ததானாலும் - பொருத்தமானது. விரைவில் வேகம் கூடிய ISDN வகை இணைப்புகள் பாவனைக்கு வர உள்ளன.

கணினி,எண்ணியல் (DIGITAL) முறையில் தகவலை பரிமாறுகிறது. தொலைபேசி தொடர்புகள் ஒப்புமை (ANALOG) முறையில் பணியாற்றுகின்றன. எனவே இந்த இரண்டையும் சேர்த்து உபயோகிக்கும் போது எண்ணியல் தகவல்களை ஒப்புமை முறையில் மாற்றி தொலைபேசி கம்பிகளில் அனுப்பவும்-பின்னர் திரும்பவும் எண்ணியல் முறையில் மாற்றி கணினிக்குள் எடுக்கவிட MODEM (மோடம்) என்கின்ற எண்ணியல் ஒப்புமை மாற்ற கருவியும் தேவை. இதனை உங்கள் இணையச்சேவை வழங்குநர் இணைப்பு தரும்போது கொடுத்துதவுவார். அல்லது நீங்கள் தனியாக வாங்கிப் பொருத்தலாம். நிமிடத்திற்கு 14,400 அல்லது 28.800 bps - (bits per second) என்ற தகவல் பரிமாற்ற வேகம் கொண்ட V.34 ரக பரிமாற்ற விதிக்கமைந்த மோடம்- ரகங்கள் இணையத் தொடர்புக்கு பொருத்தமானவை.

இணைய சேவை வழங்குநர்- உங்களுக்கு இணையத்தொடர்பு தருவதற்கு - அவருக்கு இணைப்புச் செலவாக ஒரு தொகைப்பணம் செலுத்தப்படவேண்டும். சில வழங்குநர்கள் e.mail க்கு என்று தனியாக பணம் கேட்பதில்லை. மேலும் மாதா மாதம் வாடகை செலுத்த வேண்டும். குறிப்பிட்ட மாதவாடகை- நீங்கள் 24 மணி நேரமும் இலவசமாக இணையத்தை உபயோகிப்பவரா அல்லது மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட மணித்தியாலம் இணையத் தொடர்பு இலவசமாக தேவையானவரா என்பதைப் பொறுத்து இருக்கும் இலவச மணித்தியாலங்களின் பின் ஒவ்வொரு நிமிடப் பாவனைக்கும் நீங்கள் பணம் செலுத்த வேண்டும்.

இணையத்தை உபயோகிக்க இவ்வளவு செலவழிக்க வேண்டுமா என்று எண்ணி- ஒதுங்கி விடாதீர்கள். வசதியுள்ளவர்கள் தங்கள் கணினியை இணையத்தோடு தொடர்பு கொண்டு செயலாற்றவே இவ்வளவு செலவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல மக்களும் இணையத்தின் பலனைப் பெறவேண்டும். என்ற நல்ல நோக்கத்தில் - சில நிறுவனங்கள், கணினிகளை நிறுவி இணையத் தொடர்பு கொடுத்து இணைய உபயோகத்துக்கு மணித்தியாலக்கணக்கில் வாடகைக்கு விடுகிறார்கள். இவை INTERNET CAFE - இணைய கபேக்கள் என அழைக்கப்படுகின்றன. தனியாக இணைய இணைப்பு வைத்துக் கொள்ள வசதியில்லாதவர்கள் இம் மாதிரி நிறுவனங்களில் தமது 'இணைய' தாகத்தை தீர்த்துக் கொள்ளலாம். மணித்தியாலத்திற்க்கு ஒரு குறைந்த தொகையை சுமாராக 100 ரூபா தொடக்கம் 150 ரூபா வரை செலுத்தி நீங்கள் உலா வரலாம். உங்களுக்கு களைப்பு தீர சிற்றுண்டி வகைகளும் இந்த இடங்களில் வழங்கப்படும். இன்று இந்த வகையான Internet cafe தலைநகரில் ஐந்துக்கும் அதிகமானவை பணிபுரிகின்றன இவைகளில் சில சேருவதற்கு அங்கத்துவம் எதுவும் கோருவதில்லை. இணையத்தோடு செயலாற்ற இலவச போதனை வகுப்புக்களை இவை நடாத்துகின்றன.

இன்று இணையத் தொடர்பு என்பது மாணவர்கள் , கல்லூரிகள், அரச-தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்கு இன்றியமையாத ஒரு தகவல் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் புதிதாக இணைய பாவனையாளர்களாக சேர்ந்து வருகின்றார்கள். உதாரணமாக ஐந்து மில்லியன் மக்களின் தொகை கொண்ட குட்டி நாடான டென்மார்க்கில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இணைய தொடர்பு வசதியை உபயோகின்றார்கள் என்றால் எந்தளவுக்கு இணையம் வளர்ந்துள்ளது என்பதை யூ கித்துக் கொள்ளுங்கள்.

இந்த அசுர வளர்ச்சிக்குக் காரணம் இணையத்தின் சுதந்திரப்போக்கு, இளைஞர்களின் அறிவுத் தேடல்வெறி- தினமும் வளர்ந்துவரும் தகவல்களின் எண்ணிக்கை என்பவையாகும். வயதெல்லை எதுவுமில்லாமல் ஆறு முதல் அறுபது வரை எந்த வயதினரும் எதுவித கணினி அறிவும் தேவைப்படாமல் பயன்படுத்தக்கூடிய இணையம்,இனி தமது வாழ்வில் ஒரு இன்றியமையாத தேவையாகிக் கொண்டே போகின்றது.

**சித்ரா அருள் DIPLOMA IN COMPUTING (MADURAI UNIVERSITY)**

CERTIFIED SYSTEM ANALYST AND COMPUTERPROGRAMMER
COMPUTERPOINT
COLOMBO.

S. SIVASUBRAMANIYAM.
KONDAVIL ROAD,
KOPAY SOUTH.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOPAY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுறல்

## திருமதி சகுந்தலை சுந்தரம் அவர்கள்

பிறப்பு: 1917-05-08 இறப்பு: 1997-05-22




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org